**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை**

**கலை கலாசார பீடம்**

**மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு**

**2014/2015 (*December 2019*)**

***GYS* 3233 இலங்கையின் மானிடப் புவியியல் (*Human Geography of Sri Lanka*)**

நேரம்: 03 மணித்தியாலங்கள்

எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்

பகுதி *I* இல் இருந்து இரண்டு வினாக்களையும் பகுதி *II* இல் இருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

---

## பகுதி *I*

**1.** அ) 1965 காலப்பகுதியினை அடுத்து இலங்கையின் பிறப்பு விகிதத்தில் வீழ்ச்சி ஏற்பட்டு வருவதற்கான காரணங்களை தரவுகளுடன் விளக்குக.
(10புள்ளிகள்)

ஆ) இலங்கையின் 1971-1920 வரையான காலப்பகுதியில் இறப்பு விகிதம் உயர்வாக காணப்பட்டதற்கான காரணங்களையும் அவற்றை குறைப்பதற்காக அக்காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும் விளக்குக.
(10 புள்ளிகள்)

**2.** அ) இலங்கை அரசினால் வழங்கப்படும் சுகாதார சேவைகளைப் பெற்றுக் கொள்வதில் காணப்படும் சவால்களை விளக்குக. (10 புள்ளிகள்)

ஆ) இலங்கையில் சுகாதாரத் துறையினை விருத்தி செய்வதற்காக அண்மைக் காலங்களில் அரசாங்கம் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளை விளக்குக.
(10 புள்ளிகள்)

**3.** அ) இலங்கையின் மூன்றாம் நிலைப் பொருளாதாரத்தினை வளர்ச்சி பெறச் செய்வதில் எதிர்நோக்கும் சவால்களை சுருக்கமாக விளக்குக.
(08 புள்ளிகள்)

ஆ) இலங்கையில் மூன்றாம் நிலைப் பொருளாதாரத்தை விருத்தி செய்வதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளை விபரிக்குக. (12 புள்ளிகள்)

## பகுதி II

4. "இலங்கையில் வறுமை ஒழிப்பிற்காக பல்வேறுபட்ட திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதிலும் வறுமையின் தாக்கம் தொடர்ந்த வண்ணமேயுள்ளது." இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க. (20 புள்ளிகள்)

5. "நகராக்கமானது விருத்தியடைந்த, விருத்தியடைந்து வருகின்ற நாடுகளில் பல்வேறுபட்ட தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றது." இக் கூற்றினை இலங்கையில் நகரமயமாக்கலை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க. (20 புள்ளிகள்)

6. இலங்கையின் குடித்தொகைக் கொள்கைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் நிகழ்ச்சித் திட்டங்களை விளக்குக. (20 புள்ளிகள்)

7. பின்வருவனவற்றுள் **இரண்டினிற்கு** விளக்கக்குறிப்புரை எழுதுக.
   அ) இலங்கையின் பிரதான நீர்ப்பாசனக் குடியேற்றங்கள்
   ஆ) இலங்கையின் போக்குவரத்து அபிவிருத்தி
   இ) இலங்கையில் வலுசக்தி பயன்பாடு

(2x10=20 புள்ளிகள்)